# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 169/மா/2023**

**நாள்: 07.09.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

செயற் பொறியாளர் (திட்டம்),
மைய திட்ட பிரிவு,
மதுரை மாநகராட்சி,
மதுரை – 625 002. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 05.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2023–ல் பெறப்பட்டு 169/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

2. மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 05.06.2023 நாளிட்ட தனது மனுவில் :

மதுரை மாவட்டம், வடக்கு தாலுகா, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர் அய்யப்பன் தெரு மனை எண்.5-ல் குடியிருந்துவரும் R. மயில்சாமி ஆகிய நான் சமூக ஆர்வலர் மற்றும் RTI Act 2005 ஆர்வலரும் ஆவேன். கடந்த சில ஆண்டுகளாக அரசுக்கு சொந்தமான இடங்களை பாதுகாத்தும், ஆக்கிரமிப்புகளை பலவற்றையும் (பல கோடி சொத்து) சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடுத்தும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திலும் முறையீடு செய்தும் பல அரசு சொத்துக்களையும் மற்றும் திருக்கோவிலில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டுள்ளேன்.

3. மதுரை மாநகராட்சி வார்டு எண்.1 மண்டலம் - 2 (வடக்கு) புதுவிளாங்குடி பகுதியில் உள்ள திண்டுக்கல் தேசிய தெடுஞ்சாலை சோதனை சாவடி (Police Check- PH) அருகில் உள்ள – 'கொண்டமாரி' ஓடை அரசு புறம்போக்கு இடத்தில் சட்டத்திற்கு புறம்பாகவும், அரசுக்கு

எதிராகவும், சில நபர்கள் வீடுகள் கட்டியும் (1) சாந்தி உணவகம் (2) NPA லேத் ஒர்க்ஸ் (3) M.S. மட்டன் ஸ்டால் (4) இலக்கியா ஆட்டோ கன்சல்டிங் (5) MMM வெஜிடேபில்ஸ் கடைகள் மற்றும் பழைய இரும்பு கடைகள் நடத்தி வருகிறார்கள். இக்கடைகளுக்கும், வீடுகளுக்கும் சொத்துவரி வசூலிக்கப்படவில்லை. இதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

4. மேலும் இக்கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்களை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்துவதினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே ஓடை புறம்போக்கு அரசுக்கு சொந்தமான இடத்தில், கடைகள் மற்றும் வீடுகள் கட்டியும் சட்ட விரோதமாக கட்டப்பட்ட வீடுகள் மற்றும் கடைகளை முற்றிலும் அகற்றியும் (Removes) நகர் ஊரமைப்பு சட்டம் 1971- பிரிவுகளில் 56 (1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85-ன் கீழ் Stop Work Notice/Notice for approval plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கிட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and Seal and Demolition Notice வழங்கியும் மற்றும் அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டும், பல கோடி அரசு சொத்துகளில் கடைகள் மற்றும் வீடுகள் கட்டி கொள்ள அனுமதி அளித்தும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கடைகளை கண்டும் காணாமலும் இருந்து வந்த மதுரை மாநகராட்சி மண்டலம் -2 (வடக்கு) வார்டு-1ல் பணிபுரியும் சம்மந்தப்பட்ட முன்னாள், இன்னாள் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், மேற்படி கடைகள் (ம) வீடுகளுக்கு உள்ள மின் இணைப்பை துண்டித்தும், அரசு இடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் பணிவன்புடனும் வேண்டிக் கொள்கிறேன்.

**5. இம்முறைமன்ற கடித நாள் 13.6.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி செயற் பொறியாளரிடம் இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி செயற் பொறியாளர் தன்னுடைய 18.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரர் முறையீட்டு மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்ற திரு. K. பாஸ்கரன், திரு. பவுன்ராஜ், திரு. செல்வராஜ் மற்றும் திருமதி. சாந்தி ஆகியோருக்கு 15.06.2023-ல் ஆக்கிரமிப்பு அகற்றும் அறிவிப்பு நேரில் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இறுதி அறிவிப்பு சார்பு செய்து ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**6. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 திண்டுக்கல் சோதனை சாவடி அருகில் கொண்டமாரி ஓடையை சில தனி நபர்கள் ஆக்கிரமித்து கடைகள் மற்றும் வீடுகளை கட்டியுள்ளனர். மேற்கண்ட ஆக்கிரமிப்பால் அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. வருவாய்த் துறைக்கு

சொந்தமான ஒடை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ள கடைகளுக்கு மாநகராட்சியால் வரி விதிக்கப்பட்டதால் ஆக்கிரமிப்பாளர்கள் தங்களது கடைக்கு மின் இணைப்பை பெற்று கடை நடத்தி வருகின்றனர்.

எனவே அரசுக்கு சொந்தமான ஓடை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் வீடுகளை அகற்றி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை மீட்க ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**7. மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் (திட்டம்) 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மதுரை மாநகராட்சி மண்டலம்2 (வடக்கு) வார்டு எண் 1 திண்டுக்கல் சோதனை சாவடி அருகில் கொண்டமாரி ஓடையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள நபர்களுக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி 15.6.2023 நாளிட்ட அறிவிப்பு நேரில் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்து அதன் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் மேற்கண்ட அறிவிப்பைத் தொடர்ந்து Lock and Seal Notice ஒரு வார காலத்தில் வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர், மதுரை மாநகராட்சி மண்டலம்-2 (வடக்கு), வார்டு எண்.1, திண்டுக்கல் ரோடு காவல் சோதனை சாவடி அருகில் உள்ள கொண்டமாரி ஓடையை சிலர் ஆக்கிரமித்து கடைகள் / வீடுகள் கட்டியுள்ளதாகவும் இதனை அகற்ற கோரி புகார் மனு அளித்தும் மதுரை மாநகராட்சி மண்டலம் -2 (வடக்கு) அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவித்து, தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு, ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட கொண்டமாரி ஓடையை ஆக்கிரமித்து கடைகள் கட்டப்பட்டுள்ளது என்பதும், ஆக்கிரமிப்புகாரர்களான K. பாஸ்கரன், பவுன்ராஜ், ஆனந்த் மற்றும் செல்வராஜ் ஆகியோருக்கு ஆக்கிரமிப்பை அகற்ற கோரி 15.6.2023-ல் தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது என்று இதனை தொடர்ந்து Lock and Seal Notice-ம் ஒருவார காலத்தில் வழங்கப்படும் என்றும், மதுரை மாநகராட்சி செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கொண்டமாரி ஒடை ஆக்கிரமிப்பாளர்களுக்கு, மனுதாரர் 31.5.2023 அன்று மதுரை மாநகராட்சி அலுவலகத்திற்கு மனு அளித்த பின்னர்தான், 15.6.2023 அன்று ஆக்கிரமிப்பு அகற்ற கோரி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. எனவே கொண்டமாரி ஓடையை ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, கடைகள் இயங்கிவந்துள்ளது என்பது அறிய முடிகிறது. ஆனால் மதுரை மாநகராட்சி மண்டல கள அலுவலர்கள் இத்தகைய ஆக்கிரமிப்புகளை பற்றி தங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்காமலும், தங்களுடைய கடமையை சரிவர செய்யவில்லை என்பதும் புலனாகிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும்.

நீர்நிலைகளின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிட மாண்பமை உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றத்தால் பல்வேறு தீர்ப்புகளில் கீழ்க்காணும் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**Smt. Logammal Vs The District Collector, 22.06.2019 - Madras High Court, Para 17**

i. It is clear that all "Kuttai Poramboke" "Pond Poramboke" and other Poramboke lands belongs to the Government are to be preserved for protecting the environment and for the usage of the public at large. There cannot be any leniency or misplaced sympathy in respect of such encroachments of the Government land and the authorities competent are duty bound to protect the same in all respects.

**M.J.David Vs The District Collector, Madras High Court, 26.9.2018 Para 11**

(ii) The legal Principles in this regard, are now settled and encroachments in water bodies and water resources are to be evicted in the interests of public at large and in order to protect the water resources to the State. In the event of allowing such encroachments in water bodies and water resources, the same will cause not only damage, but also will create flood related disasters, more specifically during rainy season. Thus, neither the Government nor the courts can encourage such encroachments in respect of water bodies and water resources and immediate actions are to be initiated to evict all such encroachments in water bodies and water resources.

(iii) **Supreme Court of India, Civil Appeal No.1251 of 2006**

The natural resources of earth including the air, water, land, Flora and Fauna and especially representative samples of natural ecosystem must be safeguarded for the benefits of present and future generations through careful planning or management. Thus, there is no doubt the fact that there is a responsibility bestowed upon the Government to protect and preserve the tanks and its supply channels which are important part of the environment of the area.

**(iv) Madras High Court, L. Krishnan Vs State of Tamil Nadu date 27.6.2015, Para – 14.**

In as much as this writ petition has come before us by way of public interest litigation, we take this opportunity to direct the State Government to identify all such natural water resources in different parts of the State and wherever illegal encroachment, are found, initiate

appropriate steps in accordance with the relevant provision of law for restoring such natural water storage resources which have been classified as such in the revenue records to its original position.

**Madras High Court Issues Slew of Directions To Remove Encroachments From Water Bodies Sebin James 28 Jan 2022 11.04 AM Issuing a slew of directions**

Issuing a slew of directions on top of the directions already in force, the Madras High Court has underscored that there will be no leniency towards water body encroachers and land grabbers. The court has made it clear in a batch of writ petitions seeking directions to prevent widespread encroachment that it won't allow the encroachers peacefully enjoy the properties listed as water bodies.

**Madras High Court unhappy with non-compliance of its orders to evict encroachments from waterbodies**

Warns the Tamil Nadu Government that it might be constrained to summon the Chief Secretary if the directions were not complied with in letter and spirit within 10 days.

The Madras High Court, on Monday, expressed its displeasure over non-compliance of a slew of directions issued by it to the Tamil Nadu Government on January 27 to prevent unauthorized occupation of lands classified as water bodies in revenue records. The court warned that it would be constrained to summon the Chief Secretary if its orders were not implemented in letter and spirit within the next 10 days.

Miffed over a number of writ petitions continued to be filed regarding alleged encroachment of water bodies, the first Division Bench of Chief Justice Munishwar Nath Bhandari and Justice N. Mala wondered why the government had not implemented the January 27 order effectively. The court also imposed costs of Rs.25, 000 on one of the Government officials for having failed to remove encroachments.

9. மேற்கண்ட தீர்ப்புகளை மதுரை மாநகராட்சி அலுவலர்கள் கவனத்தில் கொள்ளவில்லையென தெரியவருகிறது.

10. 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely :–

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx xx xx

(b) xx xx xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules-ன்படி, பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:-

11. மதுரை மாநகராட்சி மண்டலம்-2 (வடக்கு) வார்டு எண்.1, திண்டுக்கல் ரோடு காவல் சோதனை சாவடி அருகில் உள்ள கொண்டமாரி ஒடையில் கட்டப்பட்டுள்ள கடைகள் மாநகராட்சி ஆவணங்களின்படி மதுரை மாநகராட்சிக்கு சொந்தமானதாக இருப்பின் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுத்திட மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

அரசாணை (நிலை) எண்.186, வருவாய் (நி மு 1 (2) துறை நாள்: 29.4.2003ல்

ஓடை, வாய்க்கால், குளம், குட்டை மற்றும் ஆற்று புறம்போக்கு முதலிய அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது சம்பந்தமாக 20.1.87 நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண்.41-ஐ அரசு மறு பரிசீலனை செய்தது, இனிவரும் காலங்களில் அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களிலும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு பாதிக்கப்படாமல் பாதுகாப்பிற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களால் எடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிடப்பட்டுள்ளது:-

(i) குளம், குட்டை, ஓடை புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, ஆற்று புறம்போக்கு, நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் நீர்வழி புறம்போக்குகள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை என கருதப்படுவதால் அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ii) நீர்வழி நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் செயற் குறிப்புகளுக்கு, முழுமையான தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.41, வருவாய் (எல்) துறை, நாள்:20.1.87-ல் உள்ள தடையாணையினை அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட வருவாய் அலுவலர்கள் வழுவாது வலிந்து செயல்படுத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(iii) அரசாணை (நிலை) எண்.865, வருவாய்த்துறை, நாள்:31.8.96-ல் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களின் உண்மை நிலையை ஆராய்ந்து ஒப்படை செய்வது குறித்து பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட குழுவின் செயல்பாட்டினை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(iv) ஆக்கிரமிப்புகள் அகற்றுவது சம்பந்தமாக 7.3.2001 நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை (நிலை) எண்.05-ல் அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான குழுவின்

செயல்பாட்டினை ஆய்வு செய்து அனைத்து மாவட்டங்களிலும் நீர்நிலை, நீர்வழி புறம்போக்குகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அகற்றும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(v) வருங்காலங்களில் அனைத்து நீர்நிலை மற்றும் நீர்வழி புறம்போக்குகளில் எழும் ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அனைத்து பொதுப் பணித்துறை அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பு பிற துறை சார்ந்ததாக இருப்பின் அத்துறை மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி உரிய மேல் நடவடிக்கை தொடருமாறு மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   மனை எண்.5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
   மதுரை – 625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   தல்லாகுளம், மதுரை – 625 002.
3. செயற்பொறியாளர் (திட்டம்),
   மைய திட்ட பிரிவு,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை – 625 002.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்